# ஜனாதிபதியுடன் விவாதம்; எதிர்க்கட்சிகள் நிராகரிப்பு!

(கொழும்பு)

ஜனாதிபதி பிரேமதாசா இலங்கையின் அபிவிருத்தி, பொருளாதாரம் சம்பந்தமாக விவாதிப்பதற்கு வருமாறு எதிர்க் கட்சிகளுக்கு விடுத்த அழைப்பை எதிர்க் கட்சிகள் நிராகரித்துள்ளன.

ஜனாதிபதி பிரேமதாசா மீது கொண்டு வரப்பட்ட பதவி நீக்கத் தீர்மானம், தென்பகுதிக் கொலைகள் உட்படப் பல பிரச்னைகள் குறித்து விவாதிக்க ஜனாதிபதி உடன்பட்டாலேயே, இவ் விவாதத்தில் கலந்து கொள்வோம் என எதிர்க் கட்சிகள் நிபந்தனை விதித்திருந்தன.

எதிர்க் கட்சிகளின் கோரிக்கையை ஜனாதிபதி பிரேமதாசா ஏற்க மறுத்ததை அடுத்தே, எதிர்க் கட்சிகள் இந்த அழைப்பை நிராகரித்துள்ளன.

இவ்விவாதம் இன்றும், 3ம் திகதியும், 5ம் திகதியும் நடைபெற இருந்தது. (சு-கி)

விலை ரூபா 5-00

ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

34 திருவள்ளுவர் ஆண்டு 2023 தை 19 இதழ் 356
ணம் திங்கட்கிழமை 01 - 02 1993

## இனப்பிரச்னை பற்றி விவாதிக்க ஜனாதிபதி பிரேமா மறுப்பு

(கொழும்பு)

இனப் பிரச்னைத் தீர்வு குறித்துப் பொது விவாதம் நடத்த ஜனாதிபதி முன்வரவேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர்கள் விடுத்த அழைப்பை ஜனாதிபதி பிரேமதாசா நிராகரித்துள்ளார்.

நாட்டை மிக மோசமாகப் பாதிக்கும் இவ்விடயத்தை முதலில் விவாதிக்கவேண்டும் எனவும், இவ்விவாதத்தில் கலந்துகொள்ள நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்காத கட்சிகளின் தலைவர்களுக்கும் சந்தர்ப்பம் வழங்கவேண்டும் எனவும் எதிர்க் கட்சிகள் கோரியிருந்தன.

எனினும் இனப் பிரச்னைத் தீர்வு குறித்துப் பொது விவாதம் நடத்த ஜனாதிபதி மறுத்து இக்கோரிக்கையை நிராகரித்து விட்டார். (கி)

# ...ன்னி-பம்பைமடுவை ஆக்கிரமிக்க ...ராணுவ அணிகள் கடும் தாக்குதல்

## ...மான, கவச படைகளும் தாக்குதல்

(வவுனியா)

...யா-பம்பைமடு கிராமத்தை ஆக்கிரமிக்கும் நோக்கில் தமது இராணுவ நகர்வை படையினர் நேற்றுக்காலை பாரிய அளவில் ஆரம்பித்துள்ளனர். படையினருக்கு உதவியாக விமானப்படையும் பீரங்கி கவசபடையும் கடும் தாக்குதலை நடாத்தி வருவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

...அதிகாலை 5-00 மணியளவில் மற்றும் நவீன யுத்த ...வில், வவுனியா ஹெலிகொப்டர்கள் சகிதம் ... பகுதிக் காவல் படையினர் தமது தாக்குதலை ...ந்து வாக ஆரம்பித்தனர்.

...ண்டு வீச்சு விமா படையினர் முன்னேறும் பகுதிகளில் குண்டு வீச்சு விமானங்களும், ஹெலிகொப்டர்களும் தீவிர தாக்குதலை நடத்தி வருகின்றன.

(4-ம் பக்கம் பார்க்க

## இனப்பிரச்னைத் தீர்வுகுறித்து வெளிநாட்டு தூதர்கள் ஆய்வு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள பலவெளிநாட்டு தூதர்கள் இலங்கை இனப்பிரச்னை தீர்வு குறித்து தீவிரமாக ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கொழும்பிலுள்ளபிரிட்டன், கனடா, பிரான்ஸ், இந்தியா, அமெரிக்கா, ஜப்பான், சுவிஸ் தூதர்கள் இனப்பிரச்னைத் தீர்வை ஆவலுடன் நோக்கி நிலைமைகளை ஆராய்ந்துவருவதாகக் கூறியுள்ளனர்

மேலும் தெரிவு குழுவின் முடிவை தாங்கள் எதிர்பார்ப்பதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

மேற்படி நாட்டு தூதர்கள் பலர் தெரிவுக்குழுவின் தலைவர் திரு மங்கள முனசிங்காவையும் ஏற்கனவே சந்தித்து பேச்சுக்கள் நடத்தியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (சி)

## ...திய போர் உத்திகளுடன் ...னித் தாக்குதல் ஆரம்பம்

(வவுனியா)

...யாவில் ஆரம்பமாகி ...புதிய நடவடிக்கையில் புதிய போர் உத்திகள் ...டுத்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வடபகுதி மீது பாரிய தாக்குதலை ஆரம்பிக்கபோடப்பட்ட புதிய திட்டங்களின் அடிப்படையிலேயே இந்த தாக்குதலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இத்தாக்குதல் நீண்ட நாட்கள் தொடரும் எனவும் இராணுவ தரப்பில் தெரிவிக்...

## இட்டுவுடன் வந்த ஊழியர்மீது இலங்கை பொலிஸ் விசாரணை

(கொழும்பு)

கேர்ணல் கிட்டு வந்த எம். வி. அகதி கப்பலில் வந்து கைது செய்யப்பட்ட ஊழியர்கள் ஒன்பது பேரையும் இலங்கை இரகசியப் பொலி...

இதற்கான அனுமதியை இலங்கை அரசு இந்தியாவுடன் தொடர்புகொண்டு பெற்றதையடுத்து, இலங்கை இரகசியப் பொலிசார் தமிழகம் செல்லவுள்ளனர்.

மேற்படி கப்பல் ஊழியர்கள் 9 பேரும் தற்போது 'தடா' சட்டத்தின் கீழ் சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (கி-சி)

## ...திய போர் உத்திகளுடன் ...னித் தாக்குதல் ஆரம்பம்

(வவுனியா)
...யாவில் ஆரம்பமாகி ...த நடவடிக்கையில் ...திய போர் உத்திகள் ...த்தப்படுவதாக கூட்டுப்படைத் தலைமையகம் அறிவித்துள்ளது.

வடபகுதி மீது பாரிய தாக்குதலை ஆரம்பிக்கபோடப்பட்ட புதிய திட்டங்களின் அடிப்படையிலேயே இந்த தாக்குதலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக 'வெரித்தாஸ்' தெரிவித்தது.

இத்தாக்குதல் நீண்ட நாட்களில் தொடரும் எனவும் இராணுவ தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக 'ஏஜென்ஸி' செய்திகள் தெரிவித்தன

புதிய யுக்தியான தாக்குதல் என்ற போதும் இதுவும் ஒரு வழமையான தாக்குதலே என அவதானிகள் கூறியுள்ளனர். (இ)

## ...மட்டு. காடுகளில் 'ஒபரேஷன் மூன்லைற்'

(மட்டக்களப்பு)
...மட்டக்களப்பு மாவட்டத் ...காட்டுப் பகுதிகளில் ...ரேஷன் மூன்லைற்' என்ற ...ணுவ நடவடிக்கை ... பெற்று வருவதாக ...படைத் தலைமையகம் ...து.

...தாக்குதலை விசேட அதிரடிப்படையினர் நடாத்தி வருவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த நடவடிக்கையில் இரு அதிரடிப்படையினர் உயிரிழந்துள்ளதுடன் நால்வர் காயமடைந்ததாகவும் அவ்வட்டாரங்கள் தெரிவித்தன. (சி)

## ...க்காரா' விமானம் ...ந்த முனைக்கு வருகிறது

(கொழும்பு)
...ர்ஜன்ரீனாவிலிருந்து வாங்கப்பட்ட 'புக்காரா' போர் விமானம் தாக்குதலை... ...தற்கு ஏற்ற நிலையில் இதன் பயிற்சிகள் முடிவடைந்துள்ளதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ...ணிபம் / தொழில் பதிவு ...ன்றிதழ் வழங்கல்

(...ழ்ப்பாணம்)
...கிளானை, தெல்லிப் ... அரசாங்க அதிபர் ...தமது வாணிபம்/ ...முயற்சிகளைப் பதிவு செய்ய விண்ணப்பித்தவர்கள். வாணிபம்/தொழில் பதிவுச் சான்றிதழ்களைப் பின் வரும் நாட்களில் காலை 9-00 மணி

(4-ம் பக்கம் பார்க்க)

## வவுனியா தாக்குதலில் 3000 படையினர்

(கொழும்பு)
வவுனியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கையில் 3000 இற்கும் மேற்பட்ட படையினர் ஈடுபட்டுள்ளதாக இராணுவ தரப்பில் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் இத்தாக்குதலில் பீரங்கி பொருத்திய ஹெலிகொப்டர்களும் குண்டு வீசு விமானங்களும் ஈடுபட்டுள்ளனவாம்.

எனினும் தாக்குதலில் ஈடுபட்டுள்ள படையினரின் எண்ணிக்கை கூடுதலாயிருக்கலாமென ஏஜென்ஸி செய்திகள் தெரிவித்தன (சி-அ)

## கிட்டுவுடன் வந்த ஊழியர்மீது இலங்கை பொலிஸ் விசாரணை

(கொழும்பு)
கேர்ணல் கிட்டு வந்த எம்.வி. அகத் கப்பலில் வந்து கைது செய்யப்பட்ட ஊழியர்களில் ஒன்பது பேரையும் இலங்கை இரகசியப் பொலிசார் விசாரணை நடாத்தவுள்ளனர்.

இதற்காக இலங்கை பொலிசார் குழு அடுத்த சில தினங்களில் இந்தியா செல்லவுள்ளதாக கொழும்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன

இதற்கான அனுமதியை இலங்கைஅரசு இந்தியாவுடன் தொடர்புகொண்டு பெற்றதையடுத்து. இலங்கை இரகசியப் பொலிசார் தமிழகம் செல்லவுள்ளனர்.

மேற்படி கப்பல் ஊழியர்கள் 9 பேரும் தற்போது 'தடா' சட்டத்தின் கீழ் சென்னையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (பி-சி)

## வவுனியா வந்த ரயில் தடம்புரண்டது 17 பேர் காயம்

(கொழும்பு)
கொழும்புக் கோட்டையில் இருந்து வவுனியா நோக்கி வந்துகொண்டிருந்த ரயில் தடம் புரண்டதில், இதில் பயணம் செய்த 17 பேர் காயமடைந்தனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

## ★ இலங்கையின் கல்விக் கொள்கை அரசியலாக மாறியுள்ளது

(கொழும்பு)
இலங்கையின் கல்விக் கொள்கை அரசியலாக மாறியுள்ளது.

இவ்வாறு தென் இலங்கை பல்கலைக்கழகங்கள் மூடப்பட்டது பற்றி விமர்சித்த றெக்ஸ் டி. சில்வா வி. வி. ஸிக்கு தெரிவித்துள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

# படைத்தலைமையகம் மாறியபோதும் தளபதிகள் மோதல் தொடர்கிறது!

(கொழும்பு)
கூட்டுப்படைத் தலைமையகம் கொழும்பிலிருந்து அநுராதபுரத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்ட பின்பும் படைத் தளபதிகளிடையேயான கருத்து மோதல் தொடர்ந்தும் இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

கூட்டுப்படை தலைமையகம் அநுராதபுரத்திற்கு மாற்றப்பட்டதற்கு பல காரணங்கள் கூறப்பட்டபோதும் படைத் தளபதிகளுக்கும் கூட்டுப்படை தளபதி ஹமில்டன் வனசிங்கவுக்குமிடையே தொடர்ந்து நடைபெற்று வரும் கருத்து முரண்பாடே இதற்குக் காரணம் என 'கொழும்பு பத்தி

(4-ம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### தேவை

றபர் சீல் செய்யத் தெரிந்தவர்களும், பழக ஆர்வமுள்ள G. C. E. O/L சித்தியடைந்த இருபாலாரும் நேரில் வரவும் செல்வம் ஆட்ஸ், கே. கே. எஸ். வீதி, சுன்னாகம். (சி-7173)

### வியாபாரிகளுக்கு

தரமான இமிரேசன் கோல்ட் கவறிங் நகைகள் மணப்பெண் சோடனை நகைகள், லேஸ் நூல் வகைகள் சிறுவர் விளையாட்டுப் பொருட்கள் மற்றும் வெளிநாட்டு உள்நாட்டு அழகு சாதனப் பொருட்களை நிதான விலைக்கு மொத்தமாகப் பெற்றுக்கொள்ள ஜெயா அழகு சாதன மாளிகை, 177A, மின் நிலைய வீதி, யாழ்ப்பாணம். (ஏ-2829)

### வைத்தியம்

செங்கண்மாரி, குடற்புண், தொய்வு, வாதரோகங்கள், வலிப்பு நோய், பீநிசம், தலையிடி, தலைகாலவியல், சரும நோய்கள், மாதவிடாய்க் குத்து இரத்தப்போக்கு வெள்ளைக்கசிவு, கருவழிதல், மகப்பேறின்மை, வீரியக் குறைவு, மூலவியாதிகள், மூத்திர ரோகங்களில் பிரபலமானவர். சகல வியாதிகளையும் குணப்படுத்துவார். வேலணை வைத்தியர் சி. இராசரத்தினம் 121, 2ம் குறுக்குத் தெரு. யாழ்ப்பாணம். (சி-7119)

### O/L MATHS

ஆரம்ப அறிவேயில்லாதவர்களுக்கு குறைந்த காலத்தில் விசேட சித்திக்கு கற்பிப்பதில் 26 வருட அனுபவமுடைய ஆசிரியரினால் O/Lல் கட்டாய பாடமாகிய கணித பாடத்தின் பெரும் பிரிவாகிய அட்சர கணிதம், கேத்திர கணிதம், எண்கணிதம், புதிய கணிதம் ஆகியவற்றின் பகுதிகளை 40 மணித்தியாலங்களில் Distinction பெறுபேறடையக் கற்பிக்கப்படும். ஆறுமுகநாதன் 10, கச்சேரி கிழக்கு ஒழுங்கை, லோகேந்திரா வீதி சுண்டிக்குளி. (சி-7189)


# கெயர் ஸ்தாபனம் மூலம் விவசாயப் பொருட்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட விவசாயிகளுக்குரிய மண்ணெண்ணெய், நீரிறைக்கும் இயந்திரம், விதைகள் போன்றவற்றை எடுத்து வருவதற்கு யாழ் அரச அதிபருடாக கூட்டுப் படைத் தலைமையகத்துடன் தொடர்பு கொள்ளுமாறு அகில உலக கெயர் நிறுவன தலைமையகம் அதன் யாழ் பிராந்திய கிளைக்கு அறிவித்துள்ளது

ஏற்கனவே மன்னார் மாவட்ட கெயர் நிறுவனத்திற்கான பொருட்கள் மன்னார் மாவட்ட அரச அதிபருடாகவே விநியோகிக்கப் பட்டுள்ளதையும் தலைமையகம் சுட்டிக் காட்டியுள்ளது. (159 இ)

## ரூ. 239 கோடி கடனுதவி

(கொழும்பு)

உலகவங்கியும் ஏனைய சர்வதேச நிதி வழங்கும் ஸ்தாபனங்களும் இலங்கைக்கு 239 கோடி ரூபாவை கடனாக வழங்கியுள்ளன.

மலையகப்பகுதிகளில் குடிநீர், சுகாதார வசதிகளை மேம்படுத்துவதற்காகவே இந்தக் கடனுதவி வழங்கப்பட்டுள்ளது. (சி-இ)

# ஜனாதிபதி ஒரு நேர உணவிற்கு 82,000 ரூபா செலவு

## அத்த பத்திரிகை தகவல்

(கொழும்பு)

ஜனவரி 2ந் திகதி கண்டியில் நடைபெற்ற ஜனாதிபதி பதவியேற்ற 4-வது ஆண்டு விழாவில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவின் ஒரு நேரச் சாப்பாட்டிற்கு 82,500 ரூபா செலவு செய்யப்பட்டதாக 'அத்த' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

பல்வேறு வகையான மாமிசம் மற்றும் மீன் வகைகள் இந்த உணவுப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

இது தவறான செய்தி என்றும் ஜனாதிபதி ஆர் பிரேமதாசாவை அவதூறு செய்தமைக்காக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து மான நஷ்டஈடு கோருவது தொடர்பாக சட்ட ஆலோசனை பெறப்பட்டு வருவதாகவும் ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது. (மீ)

# திருமலைமாவட்டத்தில் நவீன ஆஸ்பத்திரி

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பகுதி மக்களின் பாவனைக்கென திருகோணமலையில் நவீன ஆஸ்பத்திரி ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இத்தாலி வழங்கியுள்ள உதவித்திட்டத்தின்கீழ் இந்த ஆஸ்பத்திரி 50கோடி ரூபா செலவில் நிர்மாணிக்கப்படும்.

இந்த ஆஸ்பத்திரியை அமைப்பதற்கான நிதியுதவி ஏற்கனவே கிடைத்திருந்த போதும், 500 குடும்பங்கள் ஆஸ்பத்திரி அமைக்கப்பட இருந்த இடத்தில் அத்துமீறி குடியேறியிருந்ததால் அதனை உடனே மேற்கொள்ள முடியாது போய்விட்டது.

(4-ம் பக்கம் பார்க்க)


சகல

# பனை, தென்னை தொழில் வல்லுனர்களுக்குமான முக்கிய அறிவித்தல்

பனை, தென்னை ஆகியவற்றில் இருந்து கள், பதநீர் சீவுபவர்கள் யாவரும், அந்தந்தப் பகுதி தெங்கு, பனம் பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்களாக இருக்கவேண்டியது அவசியமாகும். ஆகவே நீங்கள் உங்கள் பகுதிகளில் உள்ள மேற்படி சங்கங்களுடன் தொடர்பு கொண்டு உரிய முறையில் சங்கங்களின் அனுமதியைப் பெற்று, தொழில் புரியும் மரங்களுக்குச் சங்கங்களால் இலக்கமிட்டுக் கொள்ளும்படி அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். அனுமதியற்ற, இலக்கமிடப்படாத மரங்களிலிருந்து கள், பதநீர் பெறுவது கண்டுபிடிக்கப்பட்டால், அந்தந்தச் சங்கங்களால் மரங்களின் பாளைகள் வெட்டப்பட நடவடிக்கை எடுக்கப்படும். இதைக் கவனத்திற் கொண்டு தங்களுக்கு ஏற்படக்கூடிய தொழில் நட்டங்களைத் தவிர்த்துக்கொள்ளும்படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

யாழ். கொத்தணி

01. யாழ். மாநகர தெ. ப. பொ. கூ. சங்கம்
02. அரியாலை ,,
03. கோப்பாய் ,,

## அறிவிப்பாளர்

வட மாகாண
தெங்கு, பனம் பொருள்
கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்.

(எ 2832)


# இராசி பலன்

1-02-1993

திங்கட்கிழமை

(தமிழுக்கு தை 19)

நவமி: பி. ப. 1-54 வரை. இராகுகாலம் காலை 8-06 முதல் 9-36 வரை, சுபநேரம் நண்பகல் 12-36 முதல் 2-06 வரை, மரணயோகம், கார்த்திகை விரதம்.

மேடம்: சரீரபலக்குறைவு, தொழில் சிரமம், அலைச்சல்.

இடபம்: விசித்திர கனவு, காரியசித்தி, தொழிலாபம்.

மிதுனம்: போஜன கஷ்டம், மித்திரர் கவலை, யோசனை.

கடகம்: புண்ணிய காரியம், வீட்டில் மகிழ்ச்சி, பயணம்.

சிங்கம்: அதிக பிரயத்தனம், கடமையுணர்வு, சகோதர உதவி

கன்னி: மனவேதனை, தொழில்போட்டி, கண்டனம்.

துலாம்: வேண்டாத தொல்லை, அவமதிப்பு, மிரட்டல்.

விருச்சிகம்: காரிய அனுகூலம், வாக்கு சாதுரியம், பணவரவு.

தனுசு: நல்லோர் சகவாசம், புத்திசாலித்தனம், மன மகிழ்ச்சி.

மகரம்: கீர்த்தி கெடுதல், மனஸ்தாபம், காரியதடை.

கும்பம்: துன்மார்க்க சிநேகம், ஞாபக மறதி, பண முடை.

மீனம்: எதிர்பாராத உதவி, இலாசன வருகை, ஆலய வழிபாடு.

ஜோஸ்யர்


இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்

# திறப்புவிழாவும் "ராகபாவம்" நிதியுதவி நிகழ்ச்சியும்

இடம்: **மன்ற கலாமண்டபம்**
சட்டநாதர் வீதி, நல்லூர்

காலம்: 6-2-93 முதல் 8-2-93 வரை

கலாமண்டபத் திறப்புவிழா
6-2-93 சனிக்கிழமை

## நிதியுதவி நிகழ்ச்சி

7-2-93 ஞாயிறு (முதலாம் நாள்)
மாலை 5 மணி முதல் இரவு 10 மணி வரை

5-00—6-30 நாதஸ்வர இசை:

நாதஸ்வரம்: N. K. பத்மநாதன், S. S. சிதம்பரநாதன், R. கேதீஸ்வரன்,

தவில்: K. R. புண்ணியமூர்த்தி, T. உதயசங்கர், P. முருகதாஸ்

6-30—8-00 பரதநாட்டியம்:

நாட்டியக் கலைமணி செல்வன் M. அருள்மோகன்

நட்டுவாங்கம் — திருமதி சாந்தினி சிவநேசன் (கொக்குவில் கலாபவனம்)

பாட்டு: — S. பத்மலிங்கம்
மிருதங்கம்: — S. மகேந்திரன்
வயலின்: — R. ராதாகிருஷ்ணன்

8-00 — 9-30 எழுச்சிப் பாடல்கள்:
மெல்லிசைவாணர் G. சாந்தன் குழுவினர்

8 2 93 திங்கள் (இரண்டாம் நாள்)

நாதஸ்வர இசை:

## தையல் பயிற்சி

(யாழ்ப்பாணம்)

ஊரிகாவற்றுறை பிரிவு செஞ்சிலுவைசங்கம் இவ்வருடத்திற்குரிய புதிய தையற் பயிற்சி வகுப்புகளை இன்று திங்கட்கிழமை காலை 9-30 மணியளவில் ஆரம்பிக்கவுள்ளது.

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

கோப்பாய் மதி அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் கோவில் பரிபாலன சபை ஆண்டுப் பொதுச்சபைக் கூட்டம் இம்மாதம் 7-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை திரு. சு. இராமலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

தமிழ்

## மாணவருக்கு விருது

(நியூயோர்க்)

அமெரிக்கக் கல்லூரியொன்றில் சிறந்த மாணவருக்கான விருது இலங்கையைச் சேர்ந்த தமிழ் மாணவனுக்கு கிடைத்துள்ளது:

சுகுமாரன் மோதிலால் நேரு என்ற மாணவருக்கே இந்த விருது கிடைத்துள்ளது.

(ரி)


# திறப்பு விழா

பருத்தித்துறை பிரதான வீதியில் (பழையபஸ்நிலையம்)
இல. 224ல் அமைந்துள்ள கட்டிடத்தில்

எமது

# வேணி நகை மாளிகையை

எதிர்வரும்

**5 - 2 - 1993 [ வெள்ளியன்று ]**

நண்பகல் 9-00 — 12-00 வரையுள்ள சுபமுகூர்த்தத்தில்

**திறந்துவைக்கவுள்ளோம்.**

இத்திறப்பு விழாவில்
அன்பர்கள், ஆதரவாளர்கள், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.

## தங்கவேல் சன்

பருத்தித்துறை.

(ஏ-2823)



**நாதஸ்வர இசை:**

நாதஸ்வரம்: V. K. கானமூர்த்தி,
V. K. பஞ்சமூர்த்தி

தவில்: K. நித்தியானந்தன், N. கணேசன்,
R. S. சுதாகரன்

**இசைக்கச்சேரி:**

பொன் சுந்தரலிங்கம் — பாட்டு
R. ராதாகிருஷ்ணன் — வயலின்
S. மகேந்திரன் — மிருதங்கம்
S. துரைராஜா — கஞ்சிரா
சதா வேல்மாறன் — கடம்

**இன்னிசை வார்ப்புகள்:**

இசையமைப்பாளர் கண்ணன் வழங்கும்

## ★ மெல்லிசை நிகழ்ச்சி ★

பாடகர்கள்: G. சாந்தன், பெளசி,
வர்ண ராமேஸ்வரன், பார்வதி சிவபாதம்
மிதிலா விவேகானந்தன், ராதிகா சுப்பிரமணியம்

9 2-93 — 23-2-93 வரை பதினைந்து தினங்கள்
"இசைவிழா" நடைபெறும்.

7-ம், 8-ம் திகதிகளில்

**நிதியுதவிக் கட்டணம்**

**500/-250/- மண்டபவாசலில் 100/-**

வாழ்த்துகிறோம்

**ஹரன் வர்த்தக ஸ்தாபனம்,**

772, தட்டாதெரு சந்தி, யாழ்ப்பாணம்.

பொன் சுந்தரலிங்கம்
தலைவர்

(ஏ-2739)

# ★ இராணுவ நடவடிக்கையினுல் யாழ்ப்பாணத்தில் 1000 பேர் உளவியல் ரீதியாக பாதிப்பு!

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டத்தில் கடந்த இரண்டரை வருடங்களாக இடம்பெற்று வரும் இராணுவ நடவடிக்கையினுல் ஆயிரம் பேர் உளவியல் ரீதியில் பாதிப்படைந்துள்ளதாக மருத்துவ ஆய்வுகளிலிருந்து தெரியவருகிறது.

தினமும் மனநோயாளர் தொகையும் யாழ். மாவட்டத்தில் அதிகரித்துவருவதாக மனநோய் சிகிச்சை நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

வலி, வடக்கு - மேற்கு, கிழக்கு தீவுப்பகுதி உட்பட்ட பிரதேசங்களைச் சேர்ந்தவர்களே உளவியல் ரீதியில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு யாழ். போதனு வைத்தியசாலை வெளிநோயாளர் மேல் மாடி சிகிச்சைப் பிரிவில் சிகிச்சை பெற்றவருகின்றனர்.

1991-ம் ஆண்டைக் காட்டிலும் 1992ம் ஆண்டு கூடுதலான மனநோயாளர்கள் சிகிச்சை பெற்றுவருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ். போதனு வைத்தியசாலை மனநோய் சிகிச்சை நிபுணரான திரு. ஜே. சோமசுந்தரத்திடம் 700 பேரும், வைத்திய நிபுணரான திரு. ஏ. செல்வரட்ணத்திடம் 200க்கும் மேற்பட்டோரும் 1992 ம் ஆண்டு தொடக்கம் சிகிச்சை பெற்றுவருகின்றனர். இவர்கள் புதிய நோயாளர்கள் ஆவர்.

1991ம் ஆண்டு 660 பேரே மனநோயினுல் பாதிக்கப்பட்டு மேற்படி சிகிச்சை நிலையத்தில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

15 வயது தொடக்கம் 25 வயதுக்குட்பட்ட திருமணமாகாத இளைஞர் யுவதிகளே கூடுதலானேராவர். ஏனையோர் குடும்பஸ்தர்களாவர்.

சொந்த இருப்பிடங்களை இழந்த நிலையிலும், பொருளாதார நெருக்கடி, இருப்பிட வசதியின்மை, உறவினர்களை விட்டுப் பிரிந்தநிலை, இழந்த நிலை, மனப்பய ஏக்கம், உடைமைகளை இழந்தமை போன்றவற்றினுல் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று உளவியல் வைத்திய நிபுணர் கருத்துத் தெரிவித்தனர்.

இதேவேளை இராணுவ நடவடிக்கையினுல் பலத்த காயத்திற்குள்ளாகி மூளை நரம்பு பாதிக்கப்பட்டவர்கள் எண்ணிக்கையும் கடந்த வருடம் அதிகரித்திருக்கிறது.

கடந்த வருடம் மேற்படி மூளை நரம்பியல் சிகிச்சைப் பகுதியில் 500 பேர் வரையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். (கி-56)

## அரசிடம் சுதந்திரமான கல்வி கொள்கைகள் இல்லை

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தில் ஒரு சுதந்திரமான கல்விக் கொள்கைகள் இல்லை.

இவ்வாறு ஐக்கியதேசியக் கட்சிக்கு எதிராக நுகேகொடையில் நடைபெற்ற கூட்டத்தில் ஆரியமுனகொட தெரிவித்தார்.

இலங்கைப் பல்கலைக்கழகம் மூடப்பட்டது பற்றியும், ஐக்கிய தேசிய அரசாங்கம் பத்திரிகையாளர்கள் மீது தொடுத்துவரும் தாக்குதல் பற்றியும் இக் கூட்டத்தில் பலர் கண்டித்துப் பேசினர்கள். (சு)

## 5-ம் ஆண்டு புலமைப்பரிசில் மாணவர்க்கு 15ம் திகதிக்குமுன் அனுமதி

(கொழும்பு)

ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் அனைவருக்கும் எதிர்வரும் 15ம் திகதிக்கு முன் சம்பந்தப்பட்ட பாடசாலைகள் கல்வி பயில்வதற்கான அனுமதிகளை வழங்கவேண்டும்.

கடந்தவருடம் இப்பரீட்சையில் 25 ஆயிரம் மாணவர்கள் சித்தியடைந்துள்ளனர்.

மேற்படி திகதிக்கு முன்னர் இந்த மாணவர்களுக்கான பாடசாலை அனுமதிகள் கிடைக்காத பட்சத்தில் இது குறித்து கல்வி அமைச்சுக்கு அறிவிக்குமாறு அரச அதிகாரி ஒருவர் தெரிவித்தார். (இ-சி)

## இன்று

(உடுவில்)

மானிப்பாய் இந்து மகளிர் கல்லூரி ஸ்தாபகர் நினைவு தின விழா இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு கல்லூரி அதிபர் திருமதி ய. தியாகராசா தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகின்றது. (109)

## மட்டுநகரில் ஜனுதிபதி இடம் பெயர் சேவை

(கொழும்பு)

பன்னிரண்டாவது ஜனுதிபதி இடம் பெயர் சேவை மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைபெறுமென ஜனுதிபதி ஆர். பிரேமதாசா அறிவித்துள்ளார். (இ-சி)

## பிரதமர் வவுனியா விஜயம்

(கொழும்பு)

பிரதமர் திரு. டி. பி. விஜேதுங்க இன்று முதலாம் திகதி திங்கட்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்கிறுர்.

வவுனியா மாவட்டத்தில் பல அபிவிருத்தித் திட்ட வேலைகளை அவர் அங்குரார்ப்பணம் செய்து வைப்பார். (இ-சி)

## வருடாந்த உற்சவம்

(திருநெல்வேலி)

திருநெல்வேலி கிழக்கு பூதநாத சுவாமி ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

அலங்கார உற்சவத்தின் இறுதித் தினமான இம்மாதம் 8-ம் திகதி இரவு சுவாமி தெருவீதியுலா வரவுள்ளார். (157)

## வாரியார் கொழும்பு வருகிறுர்

(கொழும்பு)

திருமுருக கிருபானந்த வாரியார் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்தவென இம்மாத நடுப்பகுதியில் கொழும்புக்கு வருகை தரவுள்ளார்.

இம்மாதம் 13-ம் திகதி கொழும்பு வரும் இவர் 22-ம் திகதி வரை ஜிந்துப்பிட்டி முருகன் ஆலயத்தில் சமயச் சொற்பொழிவுகளை நிகழ்த்துவார். (வி-ரி)

## ஆந்திர பிரதேசத்தில் சட்டமன்ற உறுப்பினருடன் 9 பேர் கடத்தப்பட்டனர்

(புதுடில்லி)

ஆந்திர பிரதேசம் விசாகப்பட்டினம் மாவட்டத்திலுள்ள கொய்யூரி என்ற இடத்தில் வைத்து இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் ஒருவரும் ஒன்பதுஅரச அதிகாரிகளும் கடத்திச் செல்லப்பட்டனர்.

நேற்று முன்தினம் பொதுக்கூட்டமொன்றில் கலந்துவிட்டுத் திரும்பிக் கொண்டிருக்கும் வழியில் இந்திரா காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினரான திரு. பசுப்பிலெட்டி பவராஜு உட்பட ஒன்பது மாநில அதிகாரிகளும் நக்சலைட்டுக்களால் அடர்ந்த காட்டுக்குள் வைத்து வழிமறித்து சிறைப் பிடிக்கப்பட்டனர்.

இந்திய அரசினுல் தடை செய்யப்பட்டுள்ள மக்கள் போர்க்குழு இயக்கத்தினராலே இவர்கள் கடத்திச் செல்லப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

கடத்தப்பட்டவர்களில் இரு அதிகாரிகள் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ரி)

எழுதுவினைஞர் சேவை

## போட்டிப் பரீட்சை

(திருநெல்வேலி)

அரசாங்க எழுதுவினைஞர் சேவையின் கீழ் ஆட்களைச் சேர்ப்பதற்கான போட்டிப் பரீட்சை நேற்றுமுன்தினம் யாழ். நகரில் நடைபெற்றது.

கணிசமான அளவு மாணவர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றினர்கள். அனுமதிபட்டை கிடைக்காத விண்ணப்பதாரிகள் இப்பரீட்சைக்குத் தோற்ற முடியவில்லை.

இப்பரீட்சை விடைத்தாள்கள் யாழ். கல்வித்திணைக்களத்திற்கு எடுத்துவரப்பட்டன. இவை கப்பல் மூலம் அனுப்புவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (157-ரி)

யாழ். மாவட்டத்தில்

## திருட்டுகள் அதிகரிப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண மாவட்டத்தில் பல பகுதிகளிலும் தினசரி திருட்டுக்கள் அதிகரித்த வண்ணமுள்ளன.

கொழும்புத்துறை வீதியில் பேக்கரி ஒன்றின் முன்னுல் நிறுத்தப்பட்டிருந்த சைக்கிள் திருடப்பட்டுள்ளது.

கொழும்புத்துறை மேற்கு வதிரிபீட ஸ்ரீ விநாயகர் ஆலய நல்ல தண்ணீர் கிணற்றில் கட்டியிருந்த இரு வாளிகள் இனந்தெரியாத நபர்களால் இரவு வேளையில் திருடப்பட்டுள்ளன.

தென்மராட்சி, சரசாலை, மட்டுவில் பகுதிகளிலுள்ள ஆலயங்கள், வீடுகள், கடைகளில் பரவலாக திருட்டுக்களை நடத்திவந்த கோஷ்டி ஒன்று அண்மையில் பொது மக்களால் துரத்திப்பிடிக்கப்பட்டது.

இத்திருடர்கள் பின்னர் சாவகச்சேரி தமிழீழ காவல் துறையினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். [154]

## 14-08-2116 உலகம் அழியும் நாள்!!


(லண்டன்)

வானவெளியில் சஞ்சரிக்கும் "ஸ்மிக்டட்லிப்" என்ற வால் நட்சத்திரம் 14-08-2116ல் பூமியுடன் மோதுமென டங்கன்ஸ்டீல் என்ற வானசாஸ்திர நிபுணர் கணித்துச் சொல்லியுள்ளார்.

இந்த வால்வெள்ளி 20 மில்லியன் மெகாட் வேகத்துடன் மோதும் போது பூமி சிதறி வெடிக்குமெ அறிவித்துள்ளார். இதனை பல்நாட்டு வானவியல் நிபுணர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இப்போது இந்த வால்வெள்ளியை அணுஆயுதம் மூலம் திசைதிருப்பு வருவதற்கு விஞ்ஞானிகள் முயற்சியை மேற்கொண்டுள்ளனர். (எஸ்-சி)

## 10-ம் நாள் நினைவஞ்சலி



### பிரதமகுரு வை. சதாசிவஐயர்

மறைந்த பிரதமகுரு வை. சதாசிவஐயர் (குருநாத தேவஸ்தானம், தெல்லிப்பளை) அவர்களின் மறைவு குறித்து மல்லை. ஸ்ரீ மேருபுரம் சிறிதேவி குருகுலத்தின் கண்ணீர் அஞ்சலி. எமது குருகுலத்தின் வழிகாட்டியாகத் திகழ்ந்த அவருடைய இழப்பு ஈடுசெய்யமுடியாத ஒன்றுகும். அன்னுரின் குடும்பத்துக்கும் அனுதாபம் தெரிவித்துக் கொள்கின்றேம்.

அன்னுரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேம்.

சாம் ஜெகதீஸ்வரக்குருக்கள்,
அதிபர்,
ஸ்ரீ குருகுலம்.

[கி-7192]


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பின்வரும் பதவிக்குப் பொருத்தமான விண்ணப்பதாரிகளிடமிருந்து விண்ணப்பங்கள் 1993-03-10 ஆம் திகதி என்னும் பெற்றுக்கொள்ளப்படும்.

தற்காலிக போதனுசிரியர் (கணணிப்பகுதி)

**சம்பள அளவுத்திட்டம்:**

தற்காலிக போதனுசிரியர் (கணணிப்பகுதி) — ரூபா 3737/50- (நிலையானது) மாதமொன்றிற்கு

(பரீட்சை பெறுபேறுகளுக்காகக் காத்திருப்போருக்கு அவர்களின் பெறுபேறுகள் வெளியிடப்படும்வரை 3487/50 (நிலையானது) மாதச் சம்பளத்தில் வைக்கப்படுவர்)

**தகைமைகள்:**

பட்டதாரி அல்லது பட்ட இறுதித் தேர்வுக்குத் தோற்றிப் பெறுபேறுகளுக்காகக் காத்திருப்பவர்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் ரூபா 20/- நிதிக்கிளையில் செலுத்தி இப்பல்கலைக்கழக தாபனக்கிளை சிரேஷ்ட பதிவாளர் கந்தோரில் இருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்யப்படல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம்பெற விரும்புவோர் ரூபா 20/- காசுக்கட்டளை / தபால் கட்டளையை 23x10 ச. மீற்றர் அளவுடைய சுயமுகவரியிட்டு முத்திரையொட்டப் பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும். விதிக்கப்பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

அரசாங்கதிணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்டசபைகள் ஆகியவற்றின் விண்ணப்பதாரிகள் தமது நிறுவனங்களின் தலைவர்களினூடாக விண்ணப்பித்தல் வேண்டும்.

— பதிவாளர்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1993-01-29. [எ 2839]

# எதிரணி என்ற போர்வையில் ஜே.வி.பி. தீவிர வளர்ச்சியாம்

## 'சிலுமின' கூறுகிறது

(கொழும்பு)

தென்னிலங்கையில் எதிர்க் கட்சிகள் என்ற போர்வையில் ஜனதா விமுக்தி பெரமுன மீண்டும் தலைதூக்கி வருகின்றது என நேற்றைய 'சிலுமின' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த 26ம் தேதி நுகேகொடையில் நடைபெற்ற எதிரணியினரின் கூட்டம், மனித உரிமைகள் இயக்கம் ஆகியவைகள் இதற்குச் சான்றாக உள்ளன எனவும் 'சிலுமின' பத்திரிகை தெரிவித்துள்ளது.

இதற்கிடையில் கடந்த வாரம் கூட 'லக்திவ' பத்திரிகை காரியாலயத்துக்கு ஒரு பொலிஸ் அதிகாரி சென்று பல கேள்விக்கணைகளைத் தொடுத்துள்ளார். விகாரமகா தேவி பூங்காவில் இடம் பெற்ற மனித உரிமைகள் இயக்கக் கூட்டத்துக்கு யார் யார் வந்தார்கள், கூட்டம் நடத்துவதற்கு நிதி உதவி செய்தவர்கள் யார்? யார்யாருக்கு நன்கொடைகள் கொடுத்துள்ளீர்கள் என்று பொலிஸ் அதிகாரி விசாரித்துள்ளாராம்.

இந்தச் சம்பவங்களின் பின்பு எதிரணியினருக்கு ஜனதா விமுக்தி பெரமுன என்ற 'லேபல்' ஒட்டப்பட்டுள்ளதாம். (சு-சி)

# 5000 இந்துக்கள் லண்டனில் பேரணி

(லண்டன்)

அயோத்தி - பாபர் மசூதி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து லண்டனில் இந்துக் கோயில்கள் தாக்கப்பட்டதைக் கண்டித்து, நேற்று பிரிட்டனின் தலைநகர் லண்டனில் 5,000க்கும் மேற்பட்ட இந்துக்கள் ஆர்ப்பாட்டப் பேரணியை நடத்தினர்.

மேள, தாளங்கள் சகிதம் ஆரம்பமான இப்பேரணியில் இந்துக் கோயில்கள் தாக்கப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பலத்த கோஷங்கள் எழுப்பப்பட்டன.

இப்பேரணியை அடுத்து, பாதுகாப்புக்காக சுமார் 200 பொலிஸார் நிறுத்தப்பட்டிருந்தனர். (சி)

# போதைவஸ்து கடத்தல் இலங்கைப் பெண் கைது

(சென்னை)

சென்னை அண்ணா சர்வதேச விமானநிலையத்தில் 25 லட்சம் ரூபா பெறுமதியான போதைவஸ்துடன் இலங்கைப் பெண்மணி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

'பிறவுண் சுகர்' என்ற இந்தப் போதைப் பொருளை பெட்டி ஒன்றினுள் வைத்து இலங்கைக்குக் கடத்த முயன்ற போதே இவர் சுங்கப் பகுதியினரால் கைது செய்யப்பட்டார். (பி-சி)

# ஆஸி.தூதரக அதிகாரியின் வீட்டில் கொள்ளை

(கொழும்பு)

கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூதரக முதலாவது செயலரின் வீட்டில் பெறுமதி வாய்ந்த பொருட்கள் கொள்ளையிடப்பட்டுள்ளன.

அவர் வீட்டில் இல்லாத போது கடந்த வாரம் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது. இதுகுறித்து பொலிசார் தீவிர தேடுதல் நடத்திவருகிறார்கள்.

இதேவேளை கல்கிசையில் பிரிட்டிஷ் பிரஜை ஒருவரைத் தாக்கிய கொள்ளையர் இருவர் அவரிடமிருந்து சுமார் 25,000 ரூபாவை பறித்துச் சென்றுள்ளனராம். (சி)

# மரக்கறி விலையில் பெரும் வீழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாவில் தற்போது மரக்கறி விலைகள் தினமும் வீழ்ச்சியடைந்து வருகிறது.

திருநெல்வேலி, சாவகச்சேரி, சுன்னாகம் போன்ற பிரதான சந்தைகளில் கத்தரி, பாகற்காய் வெண்டைக்காய், போஞ்சி, அவரைக்காய், பயிற்றங்காய், கோவா, தக்காளி ஆகியன 10-00 ரூபாவிலிருந்து 20 ரூபா வரை விற்கப்படுகின்றன.

பச்சைமிளகாய் 30 ரூபாவாகவும் வெங்காயம் 5 ரூபா வரையிலும் விற்கப்படுகிறது. கீரை பொன்னாங்காணி, வகைகள் 2-00 ரூபாவாகவும் கரட், பீற்றூட் மரவள்ளிக்கிழங்கு மோதகவள்ளிக் கிழங்கு ஆகியன 10-00 ரூபா விற்குட்பட்ட விலைகளிலும் விற்கப்பட்டுவருகிறது. (56-சி)


## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பி சிறீரங்கம்

(மயிலங்கூடல்)

மயிலங்கூடல் சின்னத்தம்பி சிறீரங்கம் அவர்கள் நேற்று காலை காலமாகிவிட்டார். இறுதிக்கிரியைகள் அவர்கள் இப்போது இருக்கும் 25, மணற்தறை ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்னும் முகவரியை உடைய வீட்டில் நேற்று நண்பகல் நடைபெற்றது.

தகவல்:
சி. அப்புத்துரை
(மகன்)
(மயிலிட்டி கலைமகள் மகாவித்தியாலய முன்னை நாள் அதிபர்)

25, மணற்தறை ஒழுங்கை,
கந்தர்மடம்,
யாழ்ப்பாணம்.

(இ-7191)


திருமலை

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

இப்போது சம்பந்தப்பட்ட குடும்பங்களை வேறு இடங்களில் குடியமர்த்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

ஆஸ்பத்திரியின் நிர்மாண வேலைகள் உடன் ஆரம்பமாகுமென வீடமைப்பு நிர்மாணத் துறை அமைச்சு அறிவித்துள்ளது. (இ-ரி)

புக்காரா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த விமானப் பயிற்சியை ஆர்ஜன்ரீன அதிகாரிகள் இலங்கை விமானப்படையினருக்கு கடந்த சிலவாரங்களாக வழங்கி வந்தனர்.

தற்போது இப்பயிற்சி முடிவடைந்துள்ளதால் 'புக்காரா'வும் விரைவில் யுத்தமுனைக்கு வருமென தெரிவிக்கப்படுகிறது. (சி)

வாணிபம்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தொடக்கம் மாலை 4-00 மணி வரை யாழ்ப்பாணம், கந்தர்மடத்தில் அமைந்துள்ள தமிழீழ விடுதலைப்புலிகளின் வருவாய்ப் பகுதிச் செயலகத்தில் பெற்றுக்கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். சான்றிதழ்கள் உரிமையாளர்களிடம் மட்டுமே கையளிக்கப்படும்.

உடுவில் 2ம் திகதி, சங்கானை 3ம் திகதி, தெல்லிப்பழை 3ம் திகதி வழங்கப்படும். (சி)

படைத் தலைமையகம்

(1-ம் பக்கத்தொடர்ச்சி)

ரிகை' ஒன்று தெரிவித்துள்ளது.

மேற்படி தலைமையகம் இடமாற்றம் செய்யப்பட்ட போதும் இதுவரை பெரிய தாக்குதல் ஏதும் இடம்பெறுவதும் எந்தவித வெற்றியும் படையினருக்கு கிடைக்காததும் சுட்டிக்காட்டப்பட்டது.

எனினும் தளபதிகளின் முரண்பாடே இதற்கு காரணமெனவும் இந்த முரண்பாடு தொடர்ந்தும் இடம் பெற்று வருவதால் அதிகாரிகள் மட்டத்திலான அதிருப்தி மேலும் அதிகரித்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (சி)

வன்னி

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பம்பைமடுக் கிராமத்தைச் சுற்றிவளைத்து, தமது கட்டுப்பாட்டுக்குள் அக்கிராமத்தைக் கொண்டுவரும் முயற்சியாகவே படையினர் இக்கடும் தாக்குதலை மேற்கொண்டு வருவதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் வவுனியா, முல்லைத்தீவு, மன்னாரில் பெரும் எண்ணிக்கையான இராணுவத்தினர் வெளியேறி கடும் தாக்குதல் நடத்திவருவதாகவும், காடுகளில் ஊடுருவிப் போராளிகளைத் தேடி அழிப்பதில் இப்படையினர் ஈடுபட்டு வருவதாகவும் மற்றொரு செய்தி தெரிவித்தது.

கூட்டுப் படைத் தலைமையகம் அனுராதபுரத்திற்கு மாற்றப்பட்ட பின்னர், வடக்கில் மேற்கொள்ளப்படும் முதல் தாக்குதல் இதுவாகும். (க-சி)

# குமண கப்பலில் மருந்து வருகிறது?

(யாழ்ப்பாணம்)

யாழ். போதனா வைத்தியசாலைக்கு குமண கப்பலில் கூடுதலான மருந்து வகைகள் எடுத்து வரப்படலாமென எதிர்பார்க்கப்படுவதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன.

கடந்த மாதம் கொழும்பு சென்ற ஆஸ்பத்திரி உயர்மட்ட தூதுக்குழு அவசர மருந்து தேவைகள் குறித்தும் மற்றும் பல பிரச்சனைகள் குறித்தும் சுகாதார அமைச்சுடன் பேச்சுக்களை நடாத்தியது.

இதையடுத்து குமண கப்பலில் அவசர மருந்துகள் எடுத்து வரப்படலாமென எதிர்பார்க்கப்படுகிறது. (56-சி)

## காங்கேசனில் காப்பாற்றப்பட்ட

# 4 சிங்கள மீனவர்

## விமான மூலம் அனுப்பிவைப்பு

(கொழும்பு)

காங்கேசன்துறைக் கடலில் கட்டுமரம் ஒன்றில் தத்தளித்துக்கொண்டிருந்த 4 சிங்கள மீனவர்கள் காப்பாற்றப்பட்டு, விமான மூலம் பாதுகாப்பாக அனுப்பி வைக்கப்பட்டனர்.

திருமலையிலிருந்து வந்த இந்த 4 மீனவர்களையும் கடற்படையினர் காப்பாற்றி, பலாலியிலிருந்து விமானம் மூலம் திருமலைக்கு அனுப்பி வைத்தனர்.

இதேவேளை வடபகுதிக் கடல் பிராந்தியத்தில் தமிழ் மீனவர் சுட்டுக் கொல்லப்படுவதும், படுமோசமாகத் தாக்கப்பட்டு, அவர்களின் உடைமைகள் பறிமுதல் செய்யப்படுவதும் குறிப்பிடத்தக்கது. (சி)

# பண்டித வகுப்புகள் பண்டத்தரிப்பில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

தமிழீழ கல்வி மேம்பாட்டு பேரவையின் ஆதரவுடன் ஆரிய, திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம், கல்விக் கோட்டங்கள் தோறும் பால பண்டித பண்டித வகுப்புக்களை ஆரம்பிக்கவுள்ளது.

முன்னோடியாக பண்டத்தரிப்புக் கோட்டத்தில் இவ்வகுப்புக்கள் பெப்ரவரி 6ம் திகதிசனிக்கிழமை தொடங்குவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகுப்புக்களில் பழைய ஆசிரியர்களும் க. பொ. த. (உயர்தரத்தில்) தமிழில் திறமைச் சித்தி (சி) பெற்றவர்களும் சேர்ந்துகொள்ளலாம்.

பண்டத்தரிப்பு கல்விக் கோட்டத்தில் ஏற்கனவே பதிவுசெய்து கொண்டவர்களும் புதிதாக பதிவுசெய்ய விரும்புபவர்களும், இன்று 1ம் திகதி திங்கட்கிழமையன்று மானிப்பாய் இந்துக் கல்லூரியில் பிற்பகல் 3.00 மணிக்கு தவறாது சமுகம் தரும்படி பண்டத்தரிப்புக் கோட்டப் பிரதிக் கல்விப் பணிப்பாளர் கேட்டுக்கொள்கின்றனர். (சி)

கிரிக்கெட்:

## இங்கிலாந்து 2-128

(கல்கத்தா)

இந்திய-இங்கிலாந்து அணிகளுக்கிடையில் கல்கத்தாவில் நடைபெறும் 2வது கிரிக்கெட் டெஸ்டின் 3ம் நாள் ஆட்ட முடிவில், இங்கிலாந்து தனது 2வது இனிங்ஸில் 2 விக்கெட் இழப்புக்கு 128 ஓட்டங்களைப் பெற்றது.

முதல் இனிங்ஸில் இங்கிலாந்து அணி 164 ஓட்டங்களை மாத்திரமே பெற்றது. 2வது இனிங்ஸையும் ஆடுமாறு இங்கிலாந்து அணி பணிக்கப்பட்டுள்ளது. ஸ்கோர் விபரம்: இந்தியா-371. இங்கிலாந்து-164, 2-128. (சி)

இலங்கையின்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு - கிழக்குப் பிரச்சனை தீவிரமடைவதற்கும் தென் இலங்கையில் ஜே. வி. பி.யின் செல்வாக்கு அதிகரிப்பதற்கும் கல்வி சாதகமாக அமைந்துள்ளது என்றார். (சு-சி)

வவுனியா

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்தவர்கள் அனைவரும் குருநாகல் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை கொழும்பில் இருந்து புறப்பட்ட இந்த ரயில் மாகோவுக்கும், நாகொல்லகமுவுக்கும் இடையில் தடம் புரண்டது.

8 சரக்குப் பெட்டிகளும், 4 பயணிகள் பெட்டிகளும் தடம் புரண்டதுடன், ரயில் பாதையும் சேதம் அடைந்ததாகவும் ரயில்வேத் திணைக்கள அதிகாரி ஒருவர் கூறினார். (ரி-சி)

## வெங்காயப்பூ வீசப்படுகிறது!

(யாழ்ப்பாணம்)

வடமராட்சிப் பகுதியில் வெங்காயப்பூ வீதி ஓரங்களில் வீசப்பட்டுவருகிறது.

நெல்லியடி, வதிரி, உடுப்பிட்டி, கரவெட்டி, மந்திகை, பொலிகண்டி போன்ற இடங்களிலான தோட்டக்காரர்கள் விற்கமுடியாத நிலையில் வெங்காயப்பூவினை வெட்டி கால்நடைகளுக்கு உணவாக வீதிகளில் வீசிவருவது வழக்கமான நிகழ்ச்சியாகும். (56)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால், யாழ்ப்பாணம் கிங்ஸ்கோர்ட் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில், 1993-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 01-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News paper at the General Post office, SriLanka under Licence Nnmber B/10336/B